මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව.
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: BD/RDS/106/07/04
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2017.05.30

வரவு செலவுத்திட்ட சுற்றுநிருப இல.03/2016 (i)

அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள்,
மாவட்டச் செயலாளர்கள் / அரசாங்க அதிபர்கள்,
பிரதேச செயலாளர்கள் அனைவருக்கும்

**அனர்த்த அவசர நிலைமைகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அனர்த்த ஆபத்துக்களினால் வதிவிடங்களிலிருந்து அகற்றப்பட்ட மக்களுக்கான நிவாரணம் வழங்குதல் மற்றும் சேதமடைந்த பிரதேசங்களை மீள் கட்டியெழுப்புதல் என்பவற்றுக்கான வழிகாட்டல்**

மேற்குறித்த விடயம் தொடர்பாக தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட 2016.12.30 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 03–01 இன் (iv) மற்றும் (v) பந்திகளின்பால் உங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2. இதற்கமைவாக, தற்பொழுது காணப்படும் அவசர நிலைமை மற்றும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர நிவாரணம் வழங்குவதனை கவனத்திற் கொண்டு சமைத்த உணவு மற்றும் உலர் நிவாரணங்களை அவசர உதவி நிவாரணமாக வழங்குவதற்கான ஆகக் கூடிய வரையறை இத்தால் திருத்தப்படுகின்றது.

| விடயம் | 03/2016 சுற்றுநிருபத்தின்படி தற்பொழுது காணப்படும் வரையறை (ரூபா) | | திருத்தப்பட்ட உயர் எல்லை |
|---|---|---|---|
| அவசர அனர்த்த நிவாரணம் / சமைத்த உணவு (ஒரு நாளைக்கு) | சமைத்த உணவு (தினசரி ஆளொருவருக்கு) | 225 | 300 |
| உலர் நிவாரணங்களுக்கான ஏற்பாடு (வாரமொன்றுக்கு) | ஆளொருவருக்கு | 700 | 900 |
| | 02 பேரைக்கொண்ட குடும்பம் | 900 | 1,200 |
| | 03 பேரைக்கொண்ட குடும்பம் | 1,100 | 1,400 |
| | 04 பேரைக்கொண்ட குடும்பம் | 1,300 | 1,600 |
| | 05 பேரைக்கொண்ட குடும்பம் | 1,500 | 1,800 |

இதற்கமைவாக அனர்த்த நிவாரணங்களை வழங்கும் போது புதிய வரையறைகளை பின்பற்றுமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

3. வரவு செலவுத்திட்ட சுற்றுநிருப இல. 3/2016 இன் ஏனைய ஏற்பாடுகள் எவ்வித மாற்றமுமின்றி காணப்படும்.

**ஒப்பம்/ ஆர்.எச்.எஸ்.சமரதுங்க**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள் :

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர்
5. அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளர்
6. சுகாதாரம், போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளர்
7. மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர்
8. தவிசாளர், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம்
9. கணக்காய்வாளர் நாயகம்

(4–7) தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குவதற்காக